For all Ceremonies
At your homes
Our Service available

OLI ILLAM

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

தரைப் பந்தல், சிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒளி இல்லம்"

210, பிரதான வீதி, (யாகப்பர் ஆலய மருங்கில்) யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 24 செவ்வாய்க்கிழமை (08 03 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 101

# சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு நாம் தயார்; இதனையே தூதர்களிடம் வலியுறுத்துகிறோம்!

## மகளிர் தினத்தை முன்னிட்டு தலைவர் விடுத்த செய்தியில் தகவல்



யாழ்ப்பாணம், மார்ச் 8

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்கு வரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம், போரைநிறுத்தி சமாதான வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறோம், எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்கைகளைக் காட்டவும் நாம் தவறவில்லை,

தமிழீழ தேசியத் தலைவர் திரு, வே, பிரபாகரன் அனைத்துலக மகளிர் தினத்தை ஒட்டி வெளியிட்ட செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்

அந்த அறிக்கையில் தலைவர் தெரிவித்திருப்பதாவது:-

அனைத்துலக மகளிர் தினமாகிய இன்று, உலகப் பெண்ணினத்துடன் கைகோத்து நின்று, நாமும் எமது தாயக மண்ணில், இந்த எழுச்சி நாளைக் கொண்டாடுகிறோம்

பெண் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு நாடும்: எந்த ஒரு சமூகமும் முழுமையான சமூக விடுதலையை பெற்றதாகக் கூற முடியாது. ஏனென்றால், பெண் விடுதலையே சமூக விடுதலையை முழுமை பெறச் செய்கிறது. பெண்கள் சுதந்திரமாக கௌரவமாக, சமத்துவமாக வாழவழிசெய்யும் ஒரு மக்கள் சமூகமே உண்மையில் விடுதலை பெற்ற சமூகமாக இருக்க முடியும். அந்த சமூகமே உயரிய பண்பாட்டின் உன்னத நிலையை அடைய முடியும்.

பெண் விடுதலை

எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக் கொண்டே நாம் போராடி வருகின்றோம் சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது. சகல ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெற வேண்டும்; அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சிபூர்வமாக இன்று மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

அனைத்துலக மகளிர் தினம் யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் இன்று எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட உள்ளது.

அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் பலவும் மகளிர் தினத்தையொட்டி விசேட நிகழ்ச்சிகள், கூட்டங்கள என்பனவற்றுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

மகளிர் தினத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் பதாகைகளும், சுவரொட்டிகளும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் குறிப்பாக பிரதான வீதிகளின் சந்திகளில் காணப்படுகின்றன. வேறு பல இடங்களில் அலங்கார வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன. வீதிகள் மஞ்சள் - சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி இன்று பொது விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் யாவும் இன்று மூடப்பட்டிருக்கும்.

வடமராட்சி, தென்ம

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சுவிடிஷ் குழு யாழ். வர அரசு அனுமதி மறுப்பு!

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முன்முயற்சியாக யாழ்ப்பாணம் வருவதற்கு சுவிடிஷ் அரசுக்கு குழு ஒன்று எடுத்த முயற்சிக்கு அனுமதி வழங்க அரசு மறுத்து விட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் மக்களின் நிலையை நேரில் அறியவும் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தாங்கள் வழங்கக் கூடிய பங்களிப்புக் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசவும் —

சுவிடிஷ் அரச மற்றும் சுவிடிஷ் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய நால்வர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருவதற்கு ஸ்ரீலங்கா அரசிடம் அனுமதி கோரியிருந்தது

கடந்த ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இங்குவர அக்குழுவினர் திட்டமிட்டிருந்ததாகவும் —

ஆனால் ஸ்ரீலங்கா அரசு அதற்கான அனுமதியை வழங்க மறுத்து விட்டதாகவும் — கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனாலும் கொழும்பில் உள்ள சுவிடிஷ் தூதரகம் மூலம் இதற்கான அனுமதியைப் பெறுவதற்கு இக்குழுவினர் தொடர்ந்து முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# தமிழீழப் பெண்கள் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்

### விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு அறைகூவல்

யாழ்ப்பாணம், மார்ச் 8

ஒளிமங்கிக் கொண்டிருக்கும் எம் பெண்களின் விழிகளுக்கு மீண்டும் ஒளி பரவச் செய்ய வேண்டும். அதற்கு அனைத்துத் தமிழீழப் பெண்களும் ஒன்றிணைந்து சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராகக் குரல் கொடுப்போம். குரல்வளை முற்று முழுவதுமாக நசிக்கப்படுமுன் எம் வாழ்வுக்கு வழி கிடைத்தே ஆக வேண்டும் என ஓங்கிய குரலில் முழக்கமிடுவோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு,அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையில் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:

தமிழீழ மக்கள் நடத்துவது நியாயமான உரிமைப் போராட்டம். அநீதிக்கு எதிரான சத்தியப்போர். ஆனால் எமது ''தேசியப் பிரச்சினையை'' 'பயங்கரவாதம்'' என்று சொல்லிப் பல குத்துக்கரணங்களைப் போடுகிறது சிங்கள இனவாத அரசு, தனது கையாலாகாத்தனத்தை தமிழ் மக்கள் மீது நடத்தும் பழிவாங்கல் நடவடிக்கையால் மூடி மறைக்கின்றது.

பேரினவாதத்தை தன் தாரக மந்திரமாக முழங்கிக் கொண்டிருக்கின்றது சிங்கள அரசு. இந்த 'வாதத்தின்' விளைவுகள்தான் எம் தேசத்தின் மூலை முடுக்கு எங்கும் ஒலிக்கும் வேதனை முனகல்கள், சிதறுண்டுபோன உடலங்கள், பாய்ந்தோடும் குருதி வெள்ளம், உடலும் உளமும் உருக்குலைந்து உலாவரும் மக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா நடவடிக்கையில் மூன்றுசிப்பாய்கள் உயிரிழப்பு!

வவுனியாவில் ஆயுதப்படையினர் 'ஜெயபிம' என்ற பெயரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமுனு குலதுங்கவை மேற்கோள் காட்டி 'லங்காபுவத்' அறிவித்தது.

ஆனால் கடந்த சனிக்கிழமை வவுனியா பிரப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற சண்டையில் 3 படையினர் உயிரிழந்ததாக 'வெரித்தாஸ்' வானொலி தகவல் வெளியிட்டது.

அரச தரப்பில் வெளியிடப்பட்ட தகவல்களில் —

படையினர் தமது முன்னணி பாதுகாப்பு நிலைகளைத் தாண்டி வடக்கு நோக்கி முன்னேறி இறக்கங்குளத்தில் புலிகளுடன் மோதினர் என்றும் —

இந்த இராணுவ நடவடிக்கை சுமார் 4 மணித்தியாலங்கள் நீடித்தது என்றும் —

விமானப்படையின் ஒத்துழைப்புடன் இராணுவ அதிரடிப் படையினர் இத்தாக்குதலில் பங்குபற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கடற்படையினரின் தாக்குதலில் 3மீனவர் பலி! 4 பேர் படுகாயம்!!

வடமராட்சி, மார்ச் 8

வடமராட்சி கிழக்கு மற்றும் வடக்கு கடல்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதலில் மூன்று மீனவர்கள் பலியானார்கள். நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை சுமார் 6 மணியளவில் சட்டைக்காட்டுப் பக்கத்திலிருந்து விசைப்படகுகளில் வந்த கடற்படையினரே வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி பீரங்கி, ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த ஜெயா (வயது 27) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையும் —

உடுத்துறையிலிருந்து இடம்பெயர்ந்த தம்பி (வயது 20) என்ற இளைஞரும்—

மற்றொரு மீனவரும் மரணமானார்கள்.

நாகர்கோயில் மேற்கைச் சேர்ந்த இளையதம்பி இரத்தினசிங்கம் (வயது 48) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையும், ரங்கசாமி யேசுராஜா (வயது 43) என்பவரும் படுகாயமடைந்தனர்.

நாகர்கோயில் கடல்பகுதியில் சுமார் அரை மணி நேரம் தாக்குதல் நடத்திய படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் 15 ஆம் திகதி 'நரேமா' கப்பல் சேவை

திருகோணமலையிலிருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் 'நரேமா' கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி காங்கேசன் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது

இங்கிருந்து ஒரு தொகுதி பயணிகளை அக்கப்பலில் அழைத்து செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நரேமாவில் வரும் பயணிகளை காங்கேசன் துறையில் இருந்து பருத்தித்துறைக்கு அழைத்து வர அந்நேரத்தில் கப்பல் வசதி கிடைக்கா விட்டால், வேறு ஒரு திகதிக்கு இச் சேவை பிற்போடப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் பொருள்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் 'வாதுவ' கப்பல் 15 ஆம் திகதிக்கு முன்னர் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

அக்கப்பல் எதிர்பார்த்தபடி 15 ஆம் திகதி இங்கு வந்து சேர்ந்தால், நரேமா கப்பல் பயணிகளை காங்கேசன் துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் ஏற்றி இறக்கும் சேவையில் அது ஈடுபடும் என்றும் —

'வாதுவ' வருவது தாமதமானால் நரேமா பயணிகள் சேவையும் தாமதமாகும் என்றும் — மேலும் அறியவந்தது. (உ-3)

### கொழும்பு ஜம்பட்டா வீதியில்

## தமிழரின் விடுதியில் வெடிப் பொருள்கள்!

கொழும்பு, ஜம்பட்டா வீதியில் உள்ள தமிழரின் விடுதி ஒன்றில் இருந்து துப்பாக்கி ரவைகள் மற்றும் வெடிகுண்டுகள் தயாரிக்கும் பொருள்களை பொலீஸார் கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் [illegible] காலை அந்த விடுதியை சுற்றிவளைத்த கொ[illegible] சேனைப் பொலீஸார் அவற்றைக் கைப்பற்றியதாகவும் —

ரி 56 துப்பாக்கி ரவைகள், ஷொட், கன் ரவைகள், ஜெனரேட்டர், பற்றி, கத்திகள் ஆகியவையும் அவற்றில் அடங்கியிருந்தன என்றும் —

[illegible] இரிவிசை செய்தி வெளியிட்டுள்ளது. [illegible]

# அடுத்த வாரம் வடக்கில் ராணுவ நடவடிக்கை ஆரம்பம்?

கொழும்பு, மார்ச் 8

இம்மாதம் 15 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடையில் ஆயுதப் படையினர் வடக்கில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கவிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''வெரித்தாஸ்'' வானொலி நேற்று அறிவித்தது.

இழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்காக அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தினரில் பெரும்பாலானோர், வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-எ-6)

### முச்சந்தி முரளி



புதுமைப் பெண்ணொளி வாழி பல்லாண்டிங்கே......!

## மேய்ப்புப் பணி மாநாடு ஆரம்பம்

குருநகர், மார்ச் 8

யாழ். மறைவட்டக் கத்தோலிக்கத் திருச்சபையின் மேய்ப்புப்பணி மாநாடு இன்று பி.ப. 3.30 மணிக்கு யாழ். பேராலயத்தில் திருப்பலியுடன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

நாளை புதன்கிழமை காலையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, மத்தியூஸ் மண்டபத்தில் முக்கிய தொடர் அமர்வுகள் ஆங்குராரிப்பணம் செய்து வைக்கப்படும்.

யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபை

## மேய்ப்புப்பணி மாநாடு

1994 மார்ச் 8 - 14
புனித பத்திரிசியார் கல்லூரி

"தன்னைப் புதுப்பித்து பகிரும்
திருச்சபையை நோக்கி"

# போராட்டத்தின் நடுவில் எம்மைப் புதுப்பித்து பகிரும் ஒரு திருச்சபையாக நாம் மாறமுடியும்

யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் நடக்கப் போகின்ற தேசிய மேய்ப்புப்பணி மாநாடு முதலாவதாகும். இது மறைமாவட்ட வளர்ச்சியில் முக்கியமானதாகும். அந்த வகையில் சரித்திர வரலாற்று ஏடுகள் யாழ். மறைமாவட்ட வளர்ச்சியின் முக்கியமைல்கல்லான இம் மாநாட்டை நிச்சயம் பொறித்து வைக்கப் போகின்றன.

எமது திரு ஆயரின் கீழ் இம் மாநாட்டைக் கூட்டவும் வழிநடத்தவும் இறைவன் வரமருளியமை எமக்குக் கிடைத்த பாக்கியமென்றே கருதுகின்றோம் தூய ஆவியின் வழிநடத்துதலால் இம் மாநாடு யாழ் மறைமாவட்டத்திற்குத் தேவையானவற்றைச் செய்யவும் மாற்ற வேண்டியவற்றை மாற்றவும் புதுப்பிக்க வேண்டியவற்றைப் புதுப்பிக்கவும் சரியான முடிவுகளை எடுக்கவும் வழிவகுக்கும் என நம்புகிறோம்.

பழம் பெருமை வாய்ந்த யாழ் மறைமாவட்டம் இலங்கையின் பல மறைமாவட்டங்களுக்குத் தாய்மறைமாவட்டமாக இருந்தது என் பதுசரித்திரம் கூறும் உண்மை. இன்று எமது யாழ். மண்ணின் பிரச்சினைகளுக்கு நாமும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாட்டின் நிலைமை எப்படி இருந்தாலும் காலத்தின் தேவையை உணர்ந்து கஷ்டங்களையும் துன்பங்களையும் பொருட்படுத்தாது இறைவனின் துணையை நம்பி இம் மாநாட்டைக் கூட்டுகிறோம். இத்துன்பங்கள் நடுவிலும் எமையும் எம்மோடு இணைந்து செய்ய ஆயத்தம் என்று குருக்களும் இறைமக்களும் துணை நிற்பது எமக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது.

"உள்ளத்தின் ஆழத்தில் உங்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள் உண்மையால் ஏற்படும் நீதியிலும் புனிதத்திலும் கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்" எபேசி (5:23-24) போராட்டத்தின் நடுவில் எம்மைப் புதுப்பித்துப் பகிரும் ஓர் திருச்சபையாக நாம் மாற முடியும். இதற்கு இம் மாநாடு ஊக்கமும் ஆர்வமும் தரும்.

எமது இன்னல்கள் மத்தியிலும் சவால்களைச் சந்தித்து துன்பங்களை எதிர்நோக்கி விசுவாசத்தை உறுதிப்படுத்திப் பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக எமைச்சூழ உள்ள அனைத்து மக்கள் மத்தியில் வாழுவோம்.

தோமஸ்
சவுந்தரநாயகம்
யாழ்.மறை மாவட்ட
ஆயர்

## எழுச்சிப் பாடல்

புதுப்பித்து பகிரும் திருச்சபையாக
புத்தொளி அளிப்பீர் தூய ஆவியே
புது உளம் படைத்து இறைமக்கள் ஒன்றாக
எழுவோம் ... எம்மைப் புதுப்பித்துப் பகிர

புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக
புதுக்களம் அமைத்து மறைபணி ஆற்றிட
அருள்வளம் செழித்த இறை அனுபவத்தைப்
பெறுவோம் ... எம்மை புதுப்பித்துப் பகிர!

## எத்தனை காலம் இருட்டினில் வாழ்வது!

எத்தனை காலம் இருட்டினில் வாழ்வது?
எழுக கதிரவன் புத்தொளி பரப்பி
இத்தனை வந்ததேன்? எதனால் வந்தது
எழுப்புக கேள்வி எடுத்திடும் விடையை.

வீதியின் அருகே வீழ்ந்தொரு பிறவி
விதி இது என்று அழுதிடும் வேளை
பீதியில் ஒதுங்கி போவது நம்மெனில்
பின்எமில் நல்ல சமாரியன் எவரோ?

கோவில் மட்டா இறைவனின் இல்லம்?
குருக்கள் மட்டா இறைவனின் மக்கள்
திருச்சபை என்பது துறவிகள் தனித்தா?
பொது நிலை போர்கள் புறவினத்தாரா?

போதனை மட்டும் போதுமா? இல்லை
பொறுப்புகள் நம்முள் பகிர்ந்திடல் வேண்டும்
பொது நிலை முக்கியம் பெற்றிடல் வேண்டும்
பிரிவினை மனங்கள் தோற்றிட வேண்டும்.

தெரிவுக் குழுவின் திட்டங்கள் போல
திருச்சபைக் கூட்டம் அமைந்திடுமாமோ?
கருவாய்க் கொள்வோம் மறுமலர்ச்சியினை
கருத்தில் கொண்டு ஆய்வுகள் செய்வோம்.

- நாவண்ணன்

## தொடர வேண்டிய மாநாடு

இலங்கையின் மறைமாவட்டங்களில் நீண்ட பாரம்பரியத்தையும் தமிழ்மண்ணின் தாய்திருச்சபையாயும் திகழும் யாழ் மறைமாவட்டம் ஒரு பெரும் விருட்சம் என்றே கூறலாம். அது தன்னைப் பற்றிப் பெருமைப்படவும் காரணங்கள் உண்டு. தன்னை திருத்திக் கொள்ள இடமும் உண்டு.

முதலாம் வத்திக்கான் சங்கம் கூட ஏறக்குறைய 100 ஆண்டுகளின் பின்பு 1962 இல் 23ஆம் அருளப்பர் திருத்தந்தையால் கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருச்சபையில் 20 ஆம் நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகவும் உலகளாவிய திருச்சபையின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாகவும் அமைந்தது.

அச்சங்கம் திருச்சபைக்கு புத்துணர்ச்சி வழங்கி புதிய சிந்தனையைக் கொடுத்து ஆழமான, அர்த்தம் மிக்க விதத்தில் இவ்வுலகில் பணியாற்ற வழிவகுத்தது. உண்மையில் அச்சங்கத்தினை தொடர்ந்து நடத்தி அதை நடைமுறைப் படுத்த அதனால் உருவெடுத்த பாரிய விளைவுகளுக்கு முகம் கொடுத்து திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினை வெற்றிப் பாதையில் விறுகொண்டு செல்ல வழி வகுத்தவர் என்று கூறலாம்.

எனவே யாழ். மறைமாவட்டம் நிகழ்த்தும் மாநாட்டின் கனவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்க துணிவும், ஊக்கமும், உயிர்த்துடிப்பும் கொண்ட தலைமைத்துவமும் பங்காளர்களும் அவசியம். யாழ். திருச்சபை வெறும் நிறுவன ரீதியாக அல்ல மாறாக ஒரு சமூகமாக தன்னை உற்று நோக்குகின்றது. உலகில் ஒரு தனித் தீவாகத் தன்னை ஒதுக்கிக் கொள்ளாது. தான் வேரூன்றி வளரும் மண்ணுடனும் பண்பாட்டு சூழலுடனும் மக்களின் ஏக்கங்களுடனும் தன்னை இணைத்து நோக்குகின்றது அவ்வாறு செய்யத் தவறின் அது இறைமகன் யேசுவின் அவதாரத்தினையே பொய்யாக்குகின்றது. ஏனெனில் கிறிஸ்தவர் தனித்தும் இணைந்தும் இவ்வுலகில் வாழ, வளர அழைப்பைப் பெற்றிருக்கின்றார்கள் இறைவனும் அதற்கென அருங்கொடைகளை கொடுக்கின்றார். இவர்களுடைய பிரசன்னங்களும் பணிகளும் இவ்வுலகில் இறையரசை அல்லது இறைமகன் கொணர்ந்த இறைவாழ்வை யாவரும் பெற வழி சமைக்க வேண்டும்.

உலகில் ஒளியாய் துலங்க

(6ஆம் பக்கம் பார்க்க)

அருட் திரு
ஜீவா போல் அ.ம.தி.

## மண்ணுக்கும் மக்களுக்கும் திருச்சபை புறம்பானது அல்ல

யாழ் தலத்திருச்சபையின் முதலாவது மேய்ப்புப்பணி மாநாடு இறையருளால் இவ்வருடம் நடைபெறுகின்றது. இது எமது திருச்சபையின் சரித்திரத்தில் ஓர் முக்கிய திசைதிருப்பும் நிகழ்வாக இருக்க ஆவியானவர் வழிவகுக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

அசாதாரண போர்ச்சூழ் நிலையில் வாழ்ந்துகொண்டு ஏன் மாநாடு நடத்த வேண்டுமென்று பலர் வினா எழுப்புவர் இது இன்றைய நிலைமையால் அவசரமாக வேண்டப்படும் ஓர் மனம் திரும்புதலின் நிகழ்வு

யாழ். தலத்திருச்சபையைச் சேர்ந்த ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் நற்செய்தியின் ஒளியில் நடந்துகொண்டிருக்கும், அகோர சம்பவங்களின் அறிகுறிகளை உள்வாங்கி ஆவியின் உந்துசக்தியுடன் இறைவனை நோக்கியும், அயலவனை நோக்கியும் மனம் திரும்புவதே இந்நிகழ்வில் உயர்ந்த இலட்சியமாகும்.

எமது தலத்திருச்சபை இம் மண்ணுக்கும், மக்களுக்கும் புறம்பே அல்ல. இம்மண்ணிலுள்ள அத்தனை மெய்மைகளுக்கும் புத்துயிர் அளிக்கவே, அழைக்கப்பட்டிருக்கின்றது

எமக்களிக்கப்பட்ட இறைவார்த்தை, இறையனுபவம், திருவருட்சாதனங்கள், குழு வாழ்வு அத்தனையும் இம் மெய்மைகளின் மீட்புக்காக புதுப்பித்தலுக்காகப் பகிரப்பட வேண்டுமென்பதே, எமது புதிய நோக்கும் பணியுமாக இருக்க வேண்டும்.

அருட்கலாநிதி
எஸ் ஜே இம்மானுவல்
யாழ். மறைமாவட்ட குரு முதல்வர்.

பொதுமக்கள்
தொடர்புக்குழு
மேய்ப்புப் பணி
மாநாடு

அன்பளிப்பு:
கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி
யாத்திரைத்தல பக்தர்


## சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்குமான முக்கிய அறிவித்தல்

10-03-1994 முதல் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டு கழகத்தின் ஒளிஒலி நாடா (வீடியோ) தணிக்கை சபையினரால் இரவு 10.00 மணிக்கு மேல் வீடியோ படம் காண்பிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தலை உங்கள் நிலையங்களில் பார்வைக்கு தெரியும் படி குறிப்பிடவும்.

**கலை ஊடக இணையம்**

(சி/7518)



## கண்ணீர் அஞ்சலி

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி அமரத்துவம் அடைந்த யாழ். மருத்துவ பீட உயிரசாயனவியற் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்

கலாநிதி திருமதி
**சுலோசனா மகேந்திரன்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்

உயிரசாயனவியற்றுறை
மருத்துவபீடம்,
யாழ் பல்கலைக்கழகம் (29797)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 19 - 10 - 1916
மறைவு: 06 - 02 - 1994

முதறிஞர், பல்கலைப்புலவர்,
மில்க்வைற் செய்தி கௌரவ ஆசிரியர்

**க. சி. குலரத்தினம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

க. கனகராசா
மில்க்வைற் சவர்க்காரத்
தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-7529)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 04 - 01 - 1931
மறைவு: 18 - 02 - 1993

**கந்தையா விநாயகமூர்த்தி (K. V.)**
(முன்னாள் பிரபல யாழ். கொழும்பு வர்த்தகர்)

திதி: 08 - 03 - 1994

அன்புச்சுடரே, குடும்பத்தின் ஒளி விளக்கே,-
எமதினிய அப்பாவே!
அன்பாய் வளர்த்து விட்டு வெகு விரைவில் -
சென்றதேனோ,
ஆண்டொன்று சென்றாலும் உங்கள் அன்பு -
முகம் மாறுமோ;
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

கைதடி - நாவற்குழி,
கைதடி.


## இன்று

யாழ். தெற்கு கல்வி வலய பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய் பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்

தெற்கு கல்வி வலயத்தின் ஐந்து கோட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவிருக்கிறது. போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன

★ ★ ★

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் சுகாதாரப் பிரச்சனைகள் பற்றி ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய் காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும். (த-162)

### ஆலயங்களில்

வண்ணை வைத்தீஸ்வரன் (சிவன்) கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகிறது எதிர்வரும் 27 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும். தொடர்ந்து 30 ஆம் திகதி வரை உற்சவம் இடம்பெறும்.

முதல் ஏழு நாட்கள் திருவிளையாடல் புராணதொடர் விரிவுரையும், பின்னர் தினமும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறும். (ஒ)

### பாடசாலைகளில்

மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற் பயிற்சிப் போட்டி நாளை புதன்கிழமை செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (க-144)

★ ★ ★

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2-30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். [ஓ-117]


## கண்ணீர் அஞ்சலி

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் மாணவனும், தலைசிறந்த ஆசிரியருமான

**வ. பொன்னம்பலம் M.A**
**(V. P.)**
(கனடாவில் காலமானார்)

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். பிரிவால் துயருறும் இதயங்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஆசிரிய மன்றம்

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம். (29795)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் ஓரேற்றர் சி. சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர், யாழ் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

பிரார்த்தனையும், அஞ்சலிக்கூட்டமும், மதிய போசனமும்,

இடம்: யாழ் சுன்னாகம ஸ்கந்தவரோதயக் கல்லூரி

காலம்: 20-3-94 ஞாயிறு காலை 9-00 மணி

கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அன்னாரின் அபிமானிகள், நண்பர்கள் அனைவரையும் 15-3-94 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருடன் தொடர்பு கொண்டு விழாச் சிறப்புற உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது சங்கத்தால் அமரர் ஓறேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக 9-4-94 இற்கும், 24-4 94 இற்குமிடையில் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவராக துடுப்பெடுத்தாட்டப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்களை 1-4-94 க்கு முன்னர் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களை 12-3-94 சனி மாலை 4.00 மணிக்கு கல்லூரியில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வை. இராசையா
தலைவர்

சேது விபுலானந்தா
கௌரவ செயலாளர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:-

கந்தரோடை,
சுன்னாகம்.
(சி-7520)

207, விப ஒபிற் சேவிஸ்,
காங்கேசன் துறை வீதி
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டம் ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல

பெண் ஒடுக்குமுறை என்பது யுகம் யுகமாக எல்லா நாடுகளிலும் நிலவிவரும் ஒரு சமூக அநீதி. பழமைவாதத்திலும், மூடநம்பிக்கையிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பிலும் நீண்ட நெடுங்காலமாகப் பெண்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். எமது பண்டைய இலக்கியங்களும், வேதாந்தங்களும், அறநெறித் தத்துவங்களும் பெண் அடிமைத் தனத்தை நியாயப்

> இன்று மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாகும். இதனை ஒட்டி இக் கட்டுரை வெளியாகிறது.

படுத்தி வந்திருக்கின்றன. சமூகத்தில் ஆண்கள் அதிகாரம் நிறைந்தவர்கள், முதன்மையானவர்கள், பெண்களைவிட உயர்ந்தவர்கள் என்று புகட்டி வருகின்றன. பெண்கள், ஆண்களின் இச்சையைத் தணிக்கும் பதுமைகளாகவும் சம்பளமற்ற வேலைக்காரர்களாகவும் பிள்ளை பெற்றுக்கொடுக்கும் இயந்திரங்களாகவும் கணிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் எமது சமூக அமைப்பில் ஆணாதிக்கமும் அதனால் எழும் பெண் ஒடுக்குமுறையும் வலுவான இடத்தைப் பிடித்திருக்கின்றது.

ஆணாதிக்கம் என்றால் பால்வேறுபாட்டின் அடிப்படையில் பெண்கள் மீது ஆண்கள் செலுத்தும் அதிகார ஆதிக்கத்தையே குறிக்கிறோம். இந்த அதிகார ஆதிக்க உறவானது எமது சமூகப் பொருளாதார அமைப்பின் சகல மட்டங்களிலும் ஊடுருவி நின்று, பெண்களின் வாழ்க்கையைப் படுமோசமாகப் பாதிக்கிறது. பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக ஒதுக்குகிறது. பெண்களின் சமத்துவத்தையும், கௌரவத்தையும், சுதந்திரத்தையும் நசுக்குகிறது. பெண்களின் உரிமைகளைப் பறிக்கிறது. கருத்துலக மூடநம்பிக்கைகளிலிருந்து தோற்றம் கொண்டு, சமூக நடைமுறையாக வடிவமெடுத்து, பெண்களின் சமூக வாழ்வைச் சிரழித்து வரும் இந்த ஆணாதிக்கக் கொடுமைக்கு எதிராகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்த வேண்டும்.

ஆணாதிக்கம் என்ற சொற்பதத்தையும் ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தையும் சிலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். இந்தப் போராட்டம் ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல. இதனை எமது தேசியத் தலைவர் நன்கு தெளிவாக விளக்கியிருக்கிறார். 1992 ஆம் ஆண்டு அனைத்துலகப்பெண்கள் நாளை முன்னிட்டு தலைவர் விடுத்த அறிக்கையில் பின்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

''ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும். இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மனவுலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும்.''

அறியாமையிலிருந்து வேரூன்றி வளர்ந்து நிற்கும் ஆணாதிக்க அதிகார உறவுகளை மாற்றியமைப்பதனால், தலைவர் கூறுவதுபோல, முதலில் கருத்துப்போராட்டம் நிகழ்த்தப்படவேண்டும். பழமைவாத, பெண் அடிமைவாதக் கருத்துக்களுக்கெதிராகப் புரட்சிகரச் சிந்தனைகள் விதைக்கப்பட வேண்டும். ஆணும், பெண்ணும் சமத்துவ உரிமை கொண்ட மனிதப் பிறவிகள் என்ற உண்மை நிலையை எடுத்து விளக்க வேண்டும். தனிமனித சுதந்திரம், தனிமனித கௌரவம் பெண்களுக்கும் உரித்தான உரிமைகள் என்பதை ஆணினம் உணர்ந்து கொள்ளச் செய்யவேண்டும். சமூக, அரசியல் மட்டங்களில் இந்தக் கருத்துப்போர் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இப்படியாக முன்னெடுக்கப்படும் கருத்துப் புரட்சிதான் ஆண்களின் மனவுலகத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும். இந்தக் கருத்து மாற்றமே ஆணாதிக்க உறவுகளை ஒழித்துக்கட்ட வழிகோலும்.

நன்றி:
''சுதந்திரப்பறவைகள்''
93 ஆடி

## மாநகரசபையின் மகளிர் தின நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். மாநகராட்சி மன்றம் நடத்தும் சர்வதேச மகளிர் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பதில் மாநகர ஆணையாளர் திரு. வே. நவரத்தினராசா தலைமையில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சியில் சிறப்புரைகள், பேச்சு என்பன இடம்பெறும். மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். நடனம், பாடல், கவியரங்கம், பட்டிமன்றம், வில்லிசை, நாடகம் என்பன மாலை நிகழ்ச்சியில் அடங்கும். (ஒ-162)

## மின்ஒளியில் கல்வி

அச்சுவேலி, மார்ச் 8

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இரவுநேரக் கல்வி மின்ஒளியில் நடைபெறுகின்றது.

இந்த வருடம் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் 150 மாணவர்கள் இந்த வகுப்புக்களில் கலந்து கொண்டு பயன்பெறுகின்றனர் (க-11)

## ஓய்வூதியம்

தென்மராட்சி மார்ச் 8

பளைக் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர்க்கான மார்ச் மாதத்திற்கான ஓய்வூதியம் நாளை புதன்கிழமை முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)


மேய்ப்புப்பணி மாநாடு சிறக்க

* நல்வாழ்த்துக்கள் *

* வளன்புரம் கொழும்புத்துறை

புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா

16ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு திருநாட் திருப்பலி நடைபெறும்.

* இவ் ஆண்டு ஆலய புனரமைப்பு மேற்கொள்ளவிருப்பதால் உதவும் உள்ளங்கள் பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்

''தொழிலாளரின் பாதுகாவலர் நாமம் வாழ்க''

பங்குத் தந்தையும் பங்கு மக்களும்,
புனித சூசையப்பர் ஆலயம்

வளன்புரம்,
கொழும்புத்துறை. (29787)



கத்தோலிக்க திருச்சபையின்

மேய்ப்புப்பணி மாநாடு

சிறப்புறப் பிரார்த்திக்கிறோம்

சிற்றி மெடிக்கல்ஸ்

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

ஆங்கில மருந்து, பாம்மா வகைகளை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (சி-7515)



இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1965)
போன்றே இரண்டாவது தடவையாக
யாழ் மறைமாவட்டத்தில் நடைபெறும்

மேய்ப்புப்பணி மாநாடு

சித்திக்க வேண்டுகிறோம்!

நியூ வசந்தாஸ் களஞ்சியம்

350, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். (சி-7514)


## காணவில்லை

### ஆறுமுகம் சொக்கலிங்கம்

ஆறுமுகம் சொக்கலிங்கம் என்பவரை 02-03-1994 காலை முதல் காணவில்லை. வயது 65, நிறம் கறுப்பு, உயரம் சுமார் 6½ அடி, நீல நிற சாரம் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து தகவல்தரவும். சன்மானம் தரப்படும்.

சொ. செல்வி (மகள்)
இல 68, நீகன் நகர்,
வில்லியம் வீதி, நாவாந்துறை.

[29785]

### பல்கலை. மாணவர் வதிவிட பிரச்சினை;

## புதிய விடுதிகள் கட்ட ஐந்தாண்டுத் திட்டம்

கொழும்பு, மார்ச் 8

பல்கலைக்கழக மாணவரின் வதிவிடப் பிரச்சினைத் தீர்வு காணவும் புதிய விடுதிகளைக் கட்டவும் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக வசதிகள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

25கோடி ரூபா செலவில் இத்திட்டம் அமுல் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

ஏனைய பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூடப்பட்ட விஞ்ஞான பீடத்தைத் திறப்பது குறித்து பேச்சுகள் நடத்தப்பட்டு வருவதாக உபவேந்தர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தில் மூடப்பட்ட இரு பீடங்கள் பற்றி கிழக்கு பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் பண்டிதரத்னா தெரிவித்தார். [த-எ]

## நகரில் விடுமுறை கால சந்தை அடுத்த சனியன்று திறப்பு

யாழ்நகர மின்சார நிலைய வீதியில் —பழைய பஸ் நிலையத்திற்குச் சமீபமாக— யாழ். மாநகரசபையால் அமைக்கப்பட்டுள்ள விடுமுறைகாலச் சந்தை, எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாநகர சபையால் அனுமதிக்கப்பட்ட பொருள்களை மட்டுமே இங்கு விற்பனை செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மட்டும் இச் சந்தை திறக்கப்படும்.

### பிரிட்டன் அன்பளிப்பு செய்த

## மிகுதி மருத்துவ உபகரணம்; எடுத்து வருவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 8

பிரிட்டிஷ் அரசாங்கம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்த மருத்துவ உபகரணங்களில் எஞ்சிய உபகரணங்களை 'வாதுவ' கப்பலில் இங்கு எடுத்து வர யாழ். வைத்தியசாலையின் டாக்டர்கள் குழு ஒன்று முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

6 கொள்கலன்கள் கொண்ட இந்த மருத்துவ உபகரணங்கள் தற்போது கொழும்பில் தவம் கிடக்கின்றன. இவற்றை எடுத்து வருவதற்கே மேற்படி குழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

### மாநகரசபை வீதிகளைத் திருத்த

## தார் எடுத்து வருவதற்கு ஆணையாளர் தீவிர முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 8

ஒரு தொகுதி தார் பரல்களை உடனடியாக இங்கு கொண்டு வருவதற்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் கொழும்பில் முயற்சி செய்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், ஆணையாளர் தார் பரல்களைப் பெற்றுக்கொள்ள கொழும்பில் அதிகாரிகளிடம் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது

மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளை, முழுவதுமாகத் திருத்துவதற்கு தார் போதியளவு கையிருப்பில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் 500பரல் தாரை கப்பலில் உடனடியாக எடுத்து வருவதற்கு ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன [ஓ-17]

## உர வகைகள்

தென்மராட்சி, மார்ச் 8

பளை ப. நோ. கூ. சங்கத்திற்கு உரவகைகள் வந்துள்ளன. விவசாயிகள் தேவையான அளவு உரவகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# அழிவுறும் இயற்கை வளம் ஈடு செய்யப்பட வேண்டும்

### பட்டமளிப்பு விழாவில் உரை

பருத்தித்துறை, மார்ச் 8

இயற்கை வளங்களை நாம் எமது சொந்தச் சொத்தாகக் கருதிப் பயன்படுத்த வேண்டும். அழிக்கப்படும் வளங்களை ஈடுசெய்யுமுகமாக நாம் எமது பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலர் திரு. சு. ஸ்ரீநிவாசன் இவ்வாறு கூறினார்.

''சுதர்சனம்'' மரம் வளர்ப்பு நிர்மாணி திரு. மா. கனகராசாவுக்கு ''இயற்கை நேசன்'' என்ற பட்டமளிக்கப்பட்ட விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது;

''எமது மண்ணை மரங்களால் அரவணைத்திடு [illegible] நமது கடமையாகும். [illegible] காற்றின் ஊடுருவலைத் தடுக்கவும் மண்ணரிப்பைக் குறைக்கவும் ''சுதர்சனம்'' மரம் வளர்ப்புத் திட்டம் பெரிதும் உதவும். இத்திட்டத்தை உருவாக்கிய திரு மா. கனகராசா எமது பெரும் பாராட்டுக்கு உரியவர்'' — என்றார்.

பட்டமளிப்பு வைபவம் கடந்த மாதம் 19ஆம் திகதி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் திரு. சு. ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திரு. ஸ்ரீநிவாசன், சுதர்சனம் நிர்மாணி திரு. கனகராசாவுக்கு ''இயற்கை நேசன்'' என்ற பட்டத்தை சூட்டிக் கௌரவித்தார்.

விழாவில் உரை நிகழ்த்திய பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திரு. [illegible] இராசரத்தினம் கூறியதாவது;

''நான்கு ஏக்கர் பரப்பில் மாதாந்தம் தமது தனிப்பட்ட நிதியூட்டத்தில் மரம் வளர்த்துவரும் மனிதர் கனகராசா கௌரவத்துக்கு உரியவர். இவரைப் போன்ற நாட்டு நலன் விரும்பிகள் எங்கள் சமூகத்தில் மேன்மேலும் உருவாக வேண்டும். திரு. கனகராசாவின் முன்மாதிரியை ஏனையோரும் பின்பற்ற வேண்டும் என்றார்.

கரவை கலை இலக்கிய ஆர்வலர் குழுவைச் சேர்ந்த திரு எஸ். தபசீலன், பிரதேச செயலக நிர்வாகப் பொறுப்பதிகாரி திரு. வீரபத்திரபிள்ளை, திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை, செஞ்சிலுவைச் சங்கக் கரவெட்டிப் பிரிவுத் தலைவர் திரு. ஜே. ஜி. இராஜேந்திரா, திரு. சிவ. ஆறுமுகசாமி மேலதிகப் பதிவாளர் திரு. கி. பவானந்தன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு திரு கனகராசாவின் மரம் வளர்ப்புச் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் பாடசாலைக்கு கிட்ட 4 பரப்புக் காணி தனிக்கிணறு, குடியில்லாத வளவில் பனை, தென்னை உண்டு. கிழமை நாட்களில் பி. ப. 2—4 வரை தொடர்பு கொள்ளலாம் ச. காசிப்பிள்ளை, அரச உத்தரவு பெற்ற நில அளவையாளர், சென்ற் ஆன்ஸ் ஒழுங்கை, மானிப்பாய். [7108]

### றோணியோ பிரதி

விளாத்தாள்கள், கட்டுரைகள், புத்தகங்கள் றோணியோ செய்து கொடுக்கப்படுகிறது. 100 பிரதிகள் இரண்டு பக்கத்திற்கும் 30/- மட்டுமே அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-7433)

### பஞ்சாங்கக் கையேடு

சுபநேர, சுபகரும, நாள் கோள், நற்பலன்கள் ஜனவரி 94 முதல் டிசம்பர் வரை வீரகேசரிவார ஜோதிட ஆய்வாளர் எஸ். தெய்வநாயகம் B. A. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-7297)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவசாயம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (29745)

### SPECIAL ENGLISH

Spoken English with Grammar, G.A Q., N.C E., Year 4 — 11 ஆகியவற்றிற்குரிய விசேட ஆங்கில வகுப்புகளின் புதிய பிரிவுகள் 9-3-94, 10-3-94இல் ஆரம்பிக்கப்படும் R. Sivalingam (Dip - in - Eng.), புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரிய குளம், யாழ்ப்பாணம். (29782)

## மேலும் இரு புதிய பிரதி பொலிஸ்மா அதிபர்கள்

கொழும்பு, மார்ச் 8

புதிதாக இருவர் பிரதி பொலிஸ் மா அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நளின் தெல்கொட, என். எஸ். எம். நிஸாம் ஆகியோரே அவர்கள் ஆவர்.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் அதிபராக நிஸாம் பணி புரிவார். கொழும்பு வடக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபராக நளின் தெல்கொட கடமையாற்றுவார்.

மேலும் 11 புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர்களை பொலிஸ் தலைமைக்காரியாலயம் அறிவிக்கவுள்ளது. (ஓ-எ)

## மண்ணெண்ணெய் விநியோகம்

தென்மாரட்சி, மார்ச் 8

பனைப.நோ கூ.சங்க கிளைகளில் இன்று முதல் பங்கீட்டு அட்டைக்கு நான்கு லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை பங்கீட்டு அட்டைக்கு இரண்டு கிலோ சீனியும் வழங்கப்படவுள்ளது. (த-117


BECON
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அளவையியல்: —
S. S மனோகரன்

மீட்டல் வகுப்பு

ஆரம்பம்!
12 — 03 — 1994
சனி காலை 8-00மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-7434)



மேய்ப்புப்பணி மாநாடு
சிறப்புற நடந்தேற
எமது நல் வாழ்த்துக்கள்!

றேடியோமனுவல்
RADIOMANUAL
121 ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

றேடியோ, ரி வி, டெக் என்பனவற்றை
சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக் கொள்ள
யாழ் நகரில் 34 வருடங்களாக மக்களிடம்
நன்மதிப்பைப் பெற்ற நம்பிக்கையான ஓரிடம்

RADIOMANUAL
[சி-7516]



யாழ். மறை மாவட்ட
கத்தோலிகக திருச்சபையின்
மேய்ப்புப்பணி மாநாடு
சிறப்புற வாழ்த்துகிறோம்

* லிங்கம் கூல்பார் *
52 வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

உங்கள் தாக சாந்தியைத் தீர்க்க சிறந்த
குளிர்பானம், குளிர்களி மற்றும் சுவை மிகு
சிற்றுண்டி வகைகளுக்கு எம்மைத் தெரிவு செய்யுங்கள்.

LINGAM COOLBAR
[சி-7513]



இன்று ஆரம்பமாகும்

மேய்ப்புப்பணி மாநாடு

சிறப்புற வாழ்த்தி நிற்கிறோம்!

'ஒளி இல்லம்'
(அந்திய கால சேவைகள்)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7512)



இன்று ஆரம்பமாகும்

யாழ். மறை மாவட்ட
கத்தோலிக்க திருச்சபையின்
மேய்ப்புப்பணி மாநாடு

சிறப்பாக நடந்தேற
வாழ்த்துகிறோம்



எஸ்-எம்-பெர்ஜன்டோ

580 ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

(சி 7509)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 20 — 10 — 1937 | 13 — 02 — 1988 |

### தி. சி. சண்முகலிங்கம்

(இணுவில் கிழக்கு)

திதி: 1-94 - 03 - 08

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தன
ஆறாத் துயரில் கரைந்தது வாழ்வு
அல்லும் பகலும் உங்களை நினைந்து
ஆறுதல் அடைகிறோம்; சாந்தி அடைவீர்!

அன்பான மனைவி, பிள்ளைகள்,
சுற்றத்தார்.

''சுகந்தம்'',
இணுவில். (29758)

## எங்கள் நினைவில் நீங்கள்

| 1ஆம் ஆண்டு | 13ஆம் ஆண்டு |
|---|---|





| திருமதி குமாரசாமி அன்னம்மா | அமரர் குமாரசாமி நவயோகராஜா |
|---|---|
| பிறப்பு: 18-06-1926 | பிறப்பு: 03-03-1948 |
| இறப்பு: 17-02-1993 | இறப்பு: 29 11-1981 |

திதி: 08 - 03 - 1994

எங்கள் வாழ்க்கை இப்படித்தான் கழிந்தது...
உங்கள் நினைவுகளை அகற்ற முடியாமல்;
இனியும் அப்படித்தான் கழியும்! — ஏனெனில்
நீங்கள் எங்கள் வாழ்வோடும் செயலோடும்
ஒன்றி நிலைவெல்லாம் நிறைந்திருக்கிறீர்கள்.

பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

188, கண்டி வீதி,
சாவகச்சேரி. (29760)

## அறிவித்தல்

திருநெல்வேலி
அரசடி அருள்மிகு
சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்

### நிர்வாக சபைத் தெரிவு
### 1994-04-02

மேற்படி ஆலயம் சம்பந்தமாக காவல்துறை ஆலயப் பிரிவால் ஏற்கனவே நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை ஆரம்ப வேலைகளைப் பூர்த்தி செய்தமையால் 1994 04-02ஆம் திகதி பரிபாலன சபை கூடி நிர்வாக சபையை யாப்பு அடிப்படையில் தெரிவு செய்வதற்கு காவல்துறை அனுமதி வழங்கியுள்ளது.

எனவே சகல வழிபடுவோரும் யாப்பிற்கு அமைவாக 1994-03-26க்கு முன்பாக தமது வாக்குரிமைகளை உறுதி செய்யவும்.

-இடைக்கால நிர்வாக சபை

(சி/7517)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 23 — 09 — 1932 | 06 — 02 — 1994 |

### திருமதி நாகலிங்கம் சிவபாக்கியம்

இங்கொன்று சென்றதோ ........

எம்மை அன்போடும் ஆதரவோடும் அரவணைத்த அன்புத் தெய்வம் இறையடி சேர்ந்து இன்றுடன் முப்பத்தியொரு நாட்கள் பூர்த்தியாகிய நிலையில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

K. K. S. வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (29761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மருண்டவன் கண்ணுக்கு...

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் வெளிநாட்டுத் தலையீட்டை அனுமதிக்க முடியாது என்று ஜனாதிபதி விஜேதுங்கா மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் கனடா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று மத்தியஸ்தம் செய்வதற்குத் தெரிவித்த விருப்பத்தை உதறித் தள்ளி, அது வேண்டாம் என்று நிராகரித்திருக்கிறார்.

அமைச்சர் தொண்டமானுக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றின் மூலம் இது தெரிய வந்துள்ளது. வடக்கு — கிழக்குப் பிரச்சினை தொடர்பாக எவ்வித வெளிநாட்டு மத்தியஸ்தத்திலும் ஸ்ரீலங்கா அரசு அக்கறை காட்டவில்லை என்று சம்பந்தப்பட்ட கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைப்புகளுக்கும் அறிவிக்குமாறும் அமைச்சர் தொண்டமானை ஜனாதிபதி அறுவுறுத்தி இருக்கிறார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை என்று ஜனாதிபதியும் அரசாங்கமும் கூறும் இனப்பிரச்சினையை—தமிழர் பிரச்சினையை — நியாயமாகத் தீர்த்து வைப்பதில் அரசுக்கும் சரி, ஜனாதிபதிக்கும் சரி நாட்டமில்லை. சிங்களவர்களுக்குச் சாதகமான — சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு விருப்பமான — தமிழர்கள் ஆளப்படும் இனமாகவும் சிங்களவர்கள் ஆளும் இனமாகவும் விளங்குவதற்கு வகை செய்யும் — தீர்வைத் திணிப்பதே தென்னிலங்கைத் தரப்பினரின் ஆசையும் விருப்பம்.

வெளியார் மத்தியஸ்தம் வந்தால் அவர்களின் இந்த விருப்பம் நிறைவேற முடியாமற் போய்விடும். என்று அரசு அச்சம் கொண்டுள்ளது. வெளிநாட்டு அல்லது ஐ. நா. போன்ற சர்வதேச அமைப்புகளின் சமாதானத்துக்கான உதவிகளை அரசாங்கம் தொடர்ச்சியாகத் தவிர்த்து வருவதற்கு இந்த அச்சமே காரணமாகும்.

பிரேமதாசா காலத்தில் அவுஸ்திரேலியாவின் சமரச முயற்சிப் பணி நிராகரிக்கப்பட்டது. 1993 மார்ச்சில் நோர்வேயின் மத்தியஸ்த உதவி தேவையில்லை என்று நிராகரிக்கப்பட்டது. விஜேதுங்கா ஜனாதிபதியாக வந்த பின்னர் நோபல் பரிசுபெற்ற நான்கு பேர் சமர்ப்பித்த ஐ நா. மத்தியஸ்த யோசனையும் நிராகரிக்கப்பட்டது.

இனப் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணும் முன் முயற்சியாக யாழ்ப்பாணம் வர விருப்பம் தெரிவித்த சுவீடிஷ் அரச குழுவுக்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதி மறுத்தது அதன் நிராகரிப்புப் பட்டியலில் ஆரம்பிந்தியதாகும்.

தமிழர் பிரச்சினை தமது கையை மீறி, வேறு ஒருவரிடம் போய்விட்டால், நீதியின் பெயரில், நியாயத்தின் பெயரில் தமிழர்களின் உரிமைகள் கிடைத்துவிடும் மிகக் குறிப்பாக தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டுவிடலாம் என்ற அச்சம் சிங்கள அரசியல் தலைமைத்துவத்தின் தலையை இறுகிறுக்க வைக்கிறது

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல, இனப்பிரச்சினைக்கு வெளியார் உதவி என்றதுமே சிங்கள அரசுக்குக் குலைநடுக்கம் உண்டாகிறது.

மேலும் இந்த வருடம் தெற்கில் தேர்தல் ஆண்டு. எவ்வாறேனும் ஜனாதிபதியாகத் தாமே மீண்டும் பதவிக்கு வர வேண்டும் என்பது விஜேதுங்காவின் ஆசை, தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெல்ல வேண்டும் என்பதற்காக அங்கு நடக்கும் 'முயற்சிகள்' நாளாந்தம் அம்பலமாகி வருகின்றன.

இத்தகைய பின்னணியில் ஜனாதிபதியும் அரசினரும் வெளிநாட்டு சமரசமுயற்சியை நிராகரிப்பதோடு மட்டும் நிற்கமாட்டார்கள். உள்நாட்டு மட்டத்திலும் தீர்வுக்கான எந்த முயற்சியையும் அனுமதிக்கப்போவதில்லை. இது திண்ணம்.

## விளையாட்டு நிகழ்வுகள்

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் அராலி சின்னதுரை விளையாட்டரங்கில் நடத்திவரும்— வலி. மேற்கு வலய உதைபந்தாட்டக்கழக அணிகளுக்கு இடையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி— சத்தியா வி. க. அணி எதிர் திருமலை நட்சத்திரங்கள் வி. க. அணி.

★ பிற்பகல் 4.30 மணி. பாரதி வி. க. அணி எதிர் யங் ரோயல் வி. க. அணி.

## வவுனியா நகரசபையின் தலைவர்

வவுனியா நகர சபைத் தலைவராக தாமோதரம் பிள்ளை லிங்கநாதன் (வயது 36) என்பவரை நியமிக்க ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது. அரச சார்பு தமிழ் பத்திரிகை ஒன்று நேற்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. (உ-5)

தமிழீழப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

இந்த அரசின் ஈவிரக்கமற்ற கொன்றொழிப்பு நடவடிக்கைகளால் தமிழீழப் பெண்கள் அனுபவிக்கும் துயரங்கள் சொல்லும் தரமன்று. எழுபத்தைந்து வீதத்துக்கும் மேலான குடும்பப் பொறுப்பைச் சுமப்பவர்கள் எம் பெண்கள். அதனால் அரசின் நடவடிக்கையின் நேரடிக் கதிர் வீச்சுக்கு ஆளாகுபவர்களாக இவர்களே உள்ளனர்.

பசித்துத் துடிக்கும் பிள்ளைக்கு ஒருவேளை உணவேனும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காக உடல் கூடு இயங்க மட்டுமே வலுப் பெற்றிருக்கும் அன்னை ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கும் அவலம். ஊட்டச் சத்தின்றி கொடிய நோய்க்குப் பலியாகிப்போன தன் ஒரு குழந்தையை எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்க நேரமில்லாமல் தன் மற்றைய பிள்ளைகளுக்காக ஓடி, ஓடி உழைக்கும் தாயின் மனதை உருக்கும் உயிர்ப் போராட்டம் பொருளாதாரத் தடை, இப்படிப் பெண்ணின் வாழ்வைச் சிதறச் சின்னாபின்னமாக்கும் நிகழ்வுகள் கணத்துக்குக்கணம் தொடர்கின்றன. பட்டினிச் சாவிலிருந்து தன் பிள்ளையைக் காப்பாற்றவே வழியின்றித் தவிக்கும் ஒருதாயால் எப்படி அப்பிள்ளையின் கல்விக்காக உழைக்க முடியும்? இது ஒரு பெண், தன் குழந்தையின் இருண்ட எதிர்காலத்தை தானே உருவாக்கும் பயங்கரத் துயரம். இவை மட்டுமா எம் தமிழீழப் பெண்கள் அனுபவிக்கும் துயரங்கள்.

இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப் பட்டு உடல், உள பாதிப்புற்று எதிர்காலமே இருண்டுவிட்டதாகத் தமக்குள் முடிவெடுத்து, தம் வாழ்வைச் சிதைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உள்ளக் குமுறல்கள். இனவாத அரசின் கெடுபிடிக்குள் நிற்காமல் ஓடித் தப்ப வெளிநாடு சென்று, இடைநடுவில் தம் வாழ்வைத் தொலைத்துவிட்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்கும் பெண்களின் சோகங்கள்...... இப்படியே தொடர்கின்றன.

எம் தாயகத்தையும் சிங்கள நாடாக்கி எம் தேசியத்தையே வேரறுக்கத் திட்டமிடும் சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளால் முடமாகிப்போகும் அபாய நிலையில் இருக்கின்றனர் எம் பெண்கள். இந்த ஆபத்து உடனடியாக நீக்கப் படவேண்டும். சிங்கள அரசின் மனிதத்தன்மை அற்ற கொடுமைகள் யாவற்றையும் உலக அரங்கின் முன் அம்பலப் படுத்துவோம்.

ஒளி மங்கிக்கொண்டிருக்கும் எம் பெண்களின் விழிகளுக்கு ஒளி மீண்டும் பரவ வழி செய்ய வேண்டும். அதற்கு அனைத்துத் தமிழீழப் பெண்களும் ஒன்று இணைந்து சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராகக் குரல் கொடுப்போம். குரல்வளை முற்று முழுவதுமாக நசிக்கப்படு முன் எம் வாழ்வுக்கு வழிகிடைத்தே ஆகவேண்டும் என ஓங்கிய குரலில் முழக்கமிடுவோம்.

உடல் நைந்து, உளம் சிதைந்து வாழும் விதியை மாற்ற ஒருமித்த குரலில் 'வேண்டும் விடுதலை' என்று ஆழ் மனத்திலிருந்து அடி வயிற்றிலிருந்து எஞ்சிய எம் உயிர்மூச்சைத் திரட்டிக் குரல் கொடுப்போம்.

# ஊட்டச்சத்து இன்மையால் 95வீத யாழ். மக்கள் பாதிப்பு!

## சர்வோதய தலைவர் தகவல்

கொழும்பு, மார்ச் 8

யாழ்ப்பாண மக்களில் 95.5 சதவீதமானோர் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனது யாழ்ப்பாண விஜயத்தின் போது இதனை நான் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

சர்வோதய இயக்கத் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்தினா முன்கண்டவாறு தெரிவித்தார்.

பண்டாரவளையில் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் ஆதரவில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

டாக்டர் ஆரியரத்தினா மேலும் சொன்னதாவது:

மனித உரிமை மீறல்கள் பல சந்தர்ப்பங்களில் இடம் பெறுகின்றன. இவற்றை எல்லாம் எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்காட முடியாத நிலையில் பெரும்பாலோர் உள்ளனர். சட்டத்தை அமுல் நடத்துவதை தடுப்பதில் காடைத்தனம் பல சந்தர்ப்பங்களில் கடைப்பிடிக்கப் படுகிறது

நான் யாழ். சென்று திரும்பினேன். எதற்காக இந்த விஜயம் என்று பத்திரிகையாளர்கள் வினவினார்கள். சமாதானத்துக்கான பாதை ஒன்று உண்டு. காரணம் மக்கள் அனைவரும் நல்லவர்களே. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். மனித உரிமைகள் பேணப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (ஓ எ)

## விவேகானந்தர் நினைவு பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் ஆதரவில் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் ஏற்பாட்டில் யாழ் கல்வித் திணைக்களம் நடத்திய சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

நான்கு பிரிவுகளில் ஆண், பெண் என்ற அடிப்படையில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட அந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர் விவரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு ஆண்

த. கேதாரன் — முதலாம் இடம் (சுதுமலை சின்மய பாரதி), சி. சிவசுப்பிரமணிய சர்மா — இரண்டாம் இடம் (கொக்குவில் இந்து), அ. யோ. தனேந்திரன் — மூன்றாம் இடம் (இளவாலை மெய்கண்டான்)

கீழ்ப்பிரிவு பெண்

இ. நிருஷா — முதலாம் இடம் [மகாஜனக் கல்லூரி], ச. சிவகாமி இரண்டாம் இடம் [வட்டு. இந்து], கு. தர்சிகா — மூன்றாம் இடம் [கொக்குவில் இந்து].

மத்திய பிரிவு ஆண்

க. கங்காதரன் — முதலாம் இடம் [எழுதுமட்டுவாள் அ. த. க.], செ. சனந்தன் — இரண்டாம் இடம் (அருணோதயக் கல்லூரி], தெ. ஞானக்குமரன் — மூன்றாம் இடம் [புத்தூர் சோமாஸ்கந்தர்].

மத்திய பிரிவு பெண்

ந. சங்கீதா — முதலாம் இடம் [வேம்படி மகளிர்], ச. சிவசங்கை — இரண்டாம் இடம் [புத்தூர் சோமாஸ்கந்தா], அ. கவிதா — மூன்றாம் இடம் [கரவெட்டி பொன்னம்பல வித்தியாசாலை]

மேல்ப் பிரிவு ஆண்

கே. எஸ். ஸ்ரீதரன் — முதலாம் இடம் [யாழ். மத்திய கல்லூரி], வி. விக்கினேஸ்வரன் — இரண்டாம் இடம் [உடுப்பிட்டி இந்து], த. குமாரதாஸ் — மூன்றாம் இடம் [கொக்குவில் இந்து].

மேல்ப் பிரிவு பெண்

வ. வனிதா — முதலாம் இடம் [மானிப்பாய் மகளிர்], வி. பிரபாளினி— இரண்டாம் இடம் [கொக்குவில் இந்து], இ. கோசலை — மூன்றாம் இடம் [மெதடிஸ்த பெண்கள்]

## ஆனையிறவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 8

ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று அதிகாலை 3 மணி முதல் 4 மணி வரை தொடர்ச்சியாக பல திசைகளையும் நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் சாவகச்சேரி, பளை பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

காலை 10.30 மணியளவில் பூநகரி கல்முனை கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதும் ஹெலிகொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதேவேளை —

நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவில் கிளாலிப் பகுதியை வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்று வெளிச்சக் குண்டுகளை ஏவி 50 கலிபர் தாக்குதல்களை நடத்தியது. (உ-த-17-117)

## ஆளுநர் இம்புலான கூறுகிறார்:

# ஊழல் இல்லாத தலைவர்கள் அன்று நாட்டில் இருந்தனர்!

## இன்றோ 101 அமைச்சர்கள்!!

கொழும்பு. மார்ச் 8

அன்று நாட்டில் ஊழல்கள் இல்லாத தலைவர்கள் இருந்தனர்; பன்னிரண்டு அமைச்சர்களே இருந்தனர். இன்று 101 அமைச்சர்கள் உள்ளனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், கருத்திட்ட அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், ஏன் கமிஷனி அமைச்சர்கள் கூட நாட்டில் உள்ளனர்.

மத்திய மாகாண ஆளுநர் பி. வி. இம்புலான கண்டியில் நடந்த மாநாடு ஒன்றிற்குத் தலைமை வகித்துப் பேசிய போது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. இம்புலான, ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ தே க அரசிலும் அதற்கு முந்திய ஐ. தே. க அரசுகளிலும் அமைச்சராகப் பதவி வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய எம். பிக்களும் அமைச்சர்களும் பணம் சம்பாதிப்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கவில்லை அதனால் அவர்கள் வறுமையில் வாடி வதங்கினர் என்றும் அவர் கூறினார். (ஓ-எ)

# எதிரணியின் பிரசார கூட்டங்களில் பிரிகேடியர்!

கொழும்பு, மார்ச். 8

பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா தென்மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் முக்கிய பேச்சாளராக பேசி வருகின்றார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர் அண்மையில் பலப்பிட்டி தொகுதி உஹீங்கல கிராமத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசினார்

பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா முன்னர் இலங்கை இராணுவத்தில் பணியாற்றியவர் என்பதும்—

சமீபகாலமாக வடக்கு-கிழக்கு யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும் என்பதற்கு ஆதரவாகத் தென்னிலங்கைப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## பிரவேச பண்டித பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் க. பொ. த. உயர்தர மாணவருக்கான தமிழ்ப் பிரவேச பண்டித பரீட்சைக்கு மாணவரைத் தெரிந்தெடுத்து அனுப்புமாறு கோரும் சுற்றறிக்கை ஒன்றை பாடசாலை அதிபர்களுக்கு கல்வித் திணைக்களம் அனுப்பியுள்ளது.

மேற்படி சங்கத்தின் பிரவேச பண்டித, பாலபண்டித தமிழ்ப் பண்டித பரீட்சைகள் மே மாதத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது பிரவேச பண்டித பரீட்சையின் விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 16ஆம் திகதி ஆகும்.

## தவக்காலப் போட்டிகள்

யாழ். மனித முன்னேற்ற நிலையம், மறைக்கல்வி நிலையத்தின் ஊடாக தவக்காலப் போட்டியை மாணவர்கள் இடையேயும் வளர்ந்தோர்கள் இடையேயும் நடத்த வுள்ளது.

''அன்பினால் ஒரும்பத்தைக் கட்டி எழுப்பி அர்த்த முள்ள அகிலத்தை அமைத்திடுவோம்'' என்ற மையக் கருத்தை [illegible] கொண்டு மாணவர்கள் இடையே பேச்சு, கட்டுரை, ஓவிய கவிதைப் போட்டிகளையும், வளர்ந்தோர்கள் இடையே கவிதை ஓவியப் போட்டிகளையும் ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் பங்கு ரீதியாக நடைபெறும் இப்போட்டிகளின் [illegible] மாதம் 26 ஆம் திகதி யாழ். [illegible] நடைபெறும். (க-78)

## பஜிரோ ஜீப் எரிந்து நாசம்

கொழும்பு, மார்ச். 8

மருதானைப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான பஜிரோ ஜீப் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்து முற்றாக நாசமானது என்று அறிவிக்கப்படுகிறது.

மருதானை புகையிரத நிலையம் ஒன்றின் முன் தரித்து நின்ற ஜீப்பே திடீரென தீப்பற்றியது தீப்பற்றியதற்கான காரணம் தெரியவரவில்லை. (உ-த)

## நாளை

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்ற அரங்கில் நாளை புதன்கிழமை மாலை 6-45 மணிக்கு கலை, கலாசார கலந்துரையாடல் ஒன்று நடைபெறும்.

யாழ். மறைவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த அரங்கில் தொடர்ந்து ''மூலவேர்'' புத்தக அறிமுகமும், இலக்கியப் பண்பாட்டு நிகழ்வும், ''புது வாழ்வு'' ''பாவமன்னிப்பு'' ஆகிய நாடக நிகழ்வுகளும் இடம்பெறும். (க-51)

★ ★ ★

யாழ். கொழும்புத்துறை சென். ஜோசெப் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை புதன் பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் பி. பெனடிக்ற் தலைமையில் நடைபெறும். (த-51)

★ ★ ★

சாரணர் இயக்கத் தந்தை 'பேடன் பவல்' ஞாபகார்த்த விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மறைந்த முன்னாள் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் நினைவாக, சுழிபுரம் பிரதேச சபை வாசகர் வட்ட அனுசரணையுடன் அப்பகுதி ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள நினைவஞ்சலிக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் பிரதேச சபை நூலக மண்டபத்தில் நடைபெறும். (த-28)

# வலுக்குறைந்தோருக்கு சுய தொழில் கடன்

யாழ்ப்பாணம், மார்ச். 8

யாழ். மாவட்டத்திலுள்ள வலுக்குறைவுற்றோருக்கு சுய தொழிலுக்கான கடன் வழங்க யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய வலுக்குறைவுற்றோர் ஒருங்கிணைப்புக் குழு தீர்மானித்துள்ளது.

இணையப் பணிமனையில் அண்மையில் நடைபெற்ற வலுக்குறைவுற்றோர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இதற்கென 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக 5 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்பட உள்ளது.

16 வயது முதல் 40 வயதிற்கு இடைப்பட்ட வலுக் குறைவுற்றோர் கடன் வழங்க வென தெரிவு செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-162)

# சந்திரிகாவின் பாதுகாப்பை பலப்படுத்தக் கோரிக்கை

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவின் சொந்தப் பாதுகாப்பை தீவிரமாகப் பலப்படுத்த வேண்டும் என்று பாதுகாப்புத் துறையின் உயர் நிலை அதிகாரிகளுக்கு இரகசியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது

மாத்தறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியான மங்கள சமரவீரவை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

தென் மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரங்களுக்கு சந்திரிகாவே பொறுப்பாக இருந்து வருகின்றார் என்பது தெரிந்ததே. (உ-எ-6)

# தேசிய அரசு அமைக்க கோருகிறார் அனுரா!

கொழும்பு, மார்ச் 8

நாட்டின் பயங்கரவாதத்தை ஒழித்து சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் கைகோத்துச்செயல்பட வேண்டும்

உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா கொழும்பு சுசரித்த மண்டபத்தில் நடைபெற்ற — ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய அமைப்பின் — கூட்டத்தில் பேசிய போது இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டின் இன்றைய பிரச்சினைக்கு தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பதே ஒரே வழியாகும் என்றும் அவர் அங்கு சொன்னார். (உ-எ)

# பூநகரி முகாமை புலிகள் தொடர்ந்து தாக்குகின்றனர்

## படையினர் பலவீன நிலையில்

கொழும்பு, மார்ச் 8

விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவ முகாமை தொடர்ந்து தாக்கி வருகிறார்கள்.

பெருமளவு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இப்பகுதியில் இராணுவத்தின் பலவீனமான நிலையை இத்தாக்குதல்கள் காட்டுகின்றன.

அண்மையில் பூநகரி முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து கருத்து வெளியிடுகையில் பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் சியாகா நூன் இவ்வாறு குறிப்பிட்டார்.

# அனுரா பேசிய கூட்டத்தை குழப்பியோருக்கு கௌரவம்

கொழும்பு. மார்ச் 8

தென் மாகாணத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அனுரா பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருந்த போது அவரது பேச்சைக் கூச்சலிட்டுக் குழப்பியவர்கள் மக்களினால் வீரர்கள் போல் கௌரவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்தைக் கூச்சலிட்டுக் குழப்பியதற்காக ஐந்து பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிமன்றம் அவர்களைப் பிணையில் விடுவித்தது.

அதன்பின்னர் ஐந்து பேரும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்களால் மலர்மாலைகள் சூட்டப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் —

இந்த நிகழ்ச்சி மொரவாக்க நகரில் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உஎ-6)

## இருவார நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பாவனையாளர்களுக்கு பெப்ரவரி மாதத்துக்கான இருவார நிவாரண விநியோகம் நேற்று முதல் மேற்கொள்ளப்படுகின்றது.

உதவி அரச அதிபரின் அட்டைக்கு லீற்றர் 25 ரூபா வீதம் மண்ணெண்ணெயும் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றது. (3-51)

## விவரச் சேகரிப்பு

அரச பொதுத்துறை சார்ந்த நிறுவன ஊழியர்களின் 1994 ஆம் ஆண்டுக்கான தொகைமதிப்பு சேகரிப்புப் பணி தொகை மதிப்புப்புள்ளிவிவரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ-15)

## பல்கலை. மானிய ஆணைக்குழு உறுப்பினர்கள்

கொழும்பு, மார்ச் 8

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு புதிதாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று முதல் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பதவி வகிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

குழு உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

தலைவர்:- பேராசிரியர் பி. எல், பண்டிதரத்ன

உபதலைவர்:- பேராசிரியை என். பி. ரத்னசிறி

ஏனைய உறுப்பினர்கள்:- கே துரைராஜா, டாக்டர் எஸ் எம். ஏ. பெரேரா, டாக்டர் பி. எம். ஹீன் நிலமை, எஸ் எச். எம். மஹ்ரூப், டி. பி ஐ.பி.எல். சிறிவர்த்தனா. (உ-எ)

## தலைமன்னாரில் குண்டு வெடித்து கான்ஸ்டபிள் பலி

கொழும்பு, மார்ச். 8

தலைமன்னாரில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் ஸ்ரீலங்கா பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த செவ்வாய் தலைமன்னார் பிரதான வீதி வழியாக பொலிஸார் ரோந்து சென்ற போது வீதியில் கிடந்த கைக்குண்டு ஒன்றை கான்ஸ்டபிள் ஒருவர் எடுத்தார் என்றும்—

அப்போது அது திடீரென்று வெடித்ததாகவும் தெரிவிக்கப் பட்டது. (உ-த)

சூழலைக் காப்பாரே வாழ்வார் - மற்றெல்லாம்
நோயதன் பின் சென்று மாள்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

கலாநிதி

## திருமதி சுலோசனா மகேந்திரன்

(சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம்)

கலாநிதி ம. சுலோசனா அவர்கள் 7-3-94 அன்று காலமானார்.

இவர் சே. மகேந்திரனின் (பொறியியலாளர் மின்சாரசபை கொழும்பு), அன்பு மனைவியும், தர்சனி, கௌதமி ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. சீவரட்ணம், அன்னபூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், திருமதி ம. லலிதாவின் அன்புச் சகோதரியும், செ. மகேஸ்வரனின் (மனோ சிறாம்பியடி லேன் யாழ்ப்பாணம்) மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
செ. சீவரட்ணம்
(தகப்பன்)
செ மகேஸ்வரன்
(மனோ. மைத்துனர்)

தேவாலய வீதி,
சங்கானை.
(29800)

## விஸ்வநாதக்குரு இராசம்மா

காரைநகர், பத்தர்கேணி விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமாகிய காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ மு விஸ்வநாதக் குருவின் பிரிய பத்தினி இராசம்மா அவர்கள் 7-3-94 திங்கட்கிழமை அதிகாலை சிவபதம் எய்தினார்.

அன்னார் திருமதி நா. மகேஸ்வரி, காலஞ்சென்ற திருமதி நா. கோசேஸ்வரி, வி. ஜெகதீஸ்வர சர்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ்ரன் கல்லூரி காரைநகர், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை), வி சாமிநாதன் (ஓய்வு பெற்ற லிகிதர் இ.போ ச. கோண்டாவில்), திருமதி வை. புவனேஸ்வரி, திருமதி சோ. அகிலேஸ்வரி, காலஞ்சென்ற வி சபேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சா. இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, பாலசுப்பிரமணிய வித்தியாசாலை ஆனைக்கோட்டை), V. வைத்தீஸ்வர ஐயர், சு. சோமாஸ்கந்த சர்மா, காலஞ்சென்ற ச. நாகேஸ்வர ஐயர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 7-3-94 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
வி. ஜெகதீஸ்வர சர்மா
(மகன்)

முத்தநாயனார் கோவிலடி,
ஆனைக்கோட்டை
(29790)

## சரவணமுத்து சுப்பிரமணியம்

கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதியைச் சேர்ந்த சரவணமுத்து சுப்பிரமணியம் 7 3 94 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், தணிகாசலலிங்கம் (தனம், கனடா), திருமதி கணேசலிங்கம் கெங்காதேவி (இத்தாலி), சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி பத்மினி தணிகாசலலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் மாமனாரும், தனியா, வினோ, அனு ஆகியோரின் பேரனும், கனகம்மா, காலஞ்சென்ற பொன்னுத்துரை, காலஞ்சென்ற சின்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (8-3-94) நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கமலாதேவி
(மனைவி)

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.
(29791)

திருமதி

## சுப்பையா நாகரெத்தினம் (மாம்பழம்)

கொக்குவில் K. K. S. வீதியைச் சேர்ந்த திருமதி சுப்பையா நாகரெத்தினம் காலமாகிவிட்டார். இவர் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற (மாம்பழம்) சுப்பையாவின் அன்பு மனைவியும், குமாரவேலு [(U. K.), முன்னாள் கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்)], நல்லையா [முன்னாள் வனபரிபாலன திணைக்களம், Ceylon Brewary Ltd, தற்போது Precious Industries (Private Ltd, Colombo], இராசமலர், Dr. இரத்தினசிங்கம் (இளைப்பாறிய R.M.O.), இன்பமலர் (Canada ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவபாக்கியவதி, இந்திராணி, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை (முன்னாள் உரிமையாளர், விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்), Dr. சுசான் ஓய்வுபெற்ற R M O), இராஜரெத்தினம் (Canada — முன்னாள் சிறைச்சாலைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயக்குமார், — ரமணி (Germany), ரஜனி (முன்னாள் கொ. இ. க. ஆசிரியை) — சச்சிதானந்தம் (U. K. — முன்னாள் இலங்கை வங்கி, யாழ்), இராஜ்குமார் — பிரிந்தா U K), காலஞ்சென்ற பிரேம்குமார் (ஆசிரியர்), வதனி — நடராசா (Germany), திரு — திருமதி விஜயகுமார் (Germany), சாந்தினி — தர்மகுலசிங்கம் (Germany), புஷ்பகுஷா—விக்னராஜா (பொறியியலாளர், Canada), இந்துஷா — அசோக் (கணக்காளர், Lanka Cement Ltd, Colombo), சித்தி உஷா—குருபரன் (பொறியியல் மாணவர்கள், Canada), மஞ்சுளா — Dr. இளங்கோ (பிரிவு சுகாதார சேவைகள் பணிப்பாளர், வவுனியா), கண்ணன் (கொ. இ. க. உயர்தர வகுப்பு மாணவன் — 1993), அஞ்சந்தி — குமாரசிறி (வைத்தியத்துறை மாணவன், U. S.A.), தமயந்தி — மோகன் (Canada), கிருசாந்தி, ஆஷா, துமிந்தா (மாணவர்கள், Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 8-3-94 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. சு. இரத்தினசிங்கம்
(மகன்)

'சுந்தரபவனம்'
47, K K S வீதி,
கொக்குவில்.
(29798)

# சமாதான வழியில் தீர்வு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடையதாக முழுமை பெறமுடியும் என்பது எமது நிலைப்பாடு.

ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது தேசத்தின் நலன் கருதி எமது மக்களின் நல்வாழ்வு கருதி, நாம் முற்போக்கான கொள்கைகளை வரித்து, போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். இந்தக் கொள்கைகளை மக்கள் பற்றிக்கொண்டு அவற்றைச் செயற்படுத்த உறுதிபூண்டு, போராட்டத்தில் பங்குகொள்ளும் பொழுது தான் போராட்டம் வெற்றிப் பாதையில் செல்ல முடியும். எந்த ஒரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்கு புறம்பாக நின்று, விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. அது நடைமுறைச் சாத்தியமான காரியமுமல்ல. ஒரு விடுதலை இயக்கத்துக்குப் பின்னால் மக்கள் அணி திரண்டு, அந்த இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுக்கொண்டு, போராட்டத்தில் பங்கு கொள்ளும் பொழுது தான் விடுதலை சாத்தியமாகிறது.

### திடசங்கற்பம்

எமது சமூகத்தில் நிலவும் ஒடுக்குமுறை வடிவங்களை ஒழித்துக்கட்டி, சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநிறுத்த எமது இயக்கம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது. சமூக உறவுகளில் அடிப்படையான மாற்றத்தை நிகழ்த்துவதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும் இந்த சமூக மாற்றத்திற்கு படிப்படியாக சமூக விழிப்புணர்வு அவசியம். விழிப்புணர்வு பெற்ற மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம். மக்களின் ஆதரவுடன், மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை: நீண்ட நெடுங்காலமாக, எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப் புரையோடி நிற்கும் சமூகக் கொடுமை. இந்த சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாகச் சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழ்ப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்து இந்தப் புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

### புரட்சிகரமான வரலாற்றுச் சூழ்நிலை

தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்று நிற்பதால், எமது சமூகத்தில் ஒரு புரட்சிகரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சமூக மாற்றத்திற்கு ஏதுவான புறநிலை தோன்றியிருக்கிறது. இந்தப் புரட்சிகரமான வரலாற்றுச் சூழ்நிலையைப் பயன்படுத்தப் பெண்ணினம் தவறிவிடக் கூடாது. சமூகப் புரட்சிக்கான அகபுறச் சூழ்நிலைகள் கனிந்துள்ள இவ்வேளையில், பெண் விடுதலைக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்த பெண்கள் முன்வரவேண்டும்.

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடவேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும். இந்த வகையில், பெண் அடிமைத்தனத்திற்கு எதிராகப் பெண்களே போர்க்கொடி உயர்த்தவேண்டும்; போராடவேண்டும். இந்தப் போராட்டம், ஒரு தேசிய விடுதலை அமைப்பின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப் படுமானால் அது வலுமிக்க சக்தியாக வெற்றியைப் பெற்றுத்தரும்.

### புதிய சவால்கள்

இன்று, எமது தேசிய விடுதலைப் போராட்டம் புதிய சவால்களையும், புதிய நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நிற்கிறது. என்றுமில்லாதவாறு சிங்களப் பேரினவாத சக்திகள் ஓரணியில் ஒன்று திரண்டு, தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிட கங்கணம் கட்டி நிற்கின்றன. தமிழ் மக்கள்மீது தொடர்ந்து சாவையும் அழிவையும் கட்டவிழ்த்துவிட்டு, தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்கும்நோக்கில், பெரியதொரு போருக்கான தயாரிப்பு வேலையையும் சிங்கள அரசு மேற்கொண்டு வருகிறது.

### இராணுவத் தீர்வுக்கே சிங்களப் பேரினவாதம் முதலுரிமை

அன்று தொட்டு இன்றுவரை கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சிங்களப் பேரினவாதம் இராணுவத் தீர்வுக்கே முதலுரிமை கொடுத்து வருகிறது யுத்தத்திலும், ஆயுத அடக்குமுறையிலும் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது. சமாதானப் பாதைகளை மூடிவிட்டு, வன்முறை மார்க்கத்தையே கடைப்பிடித்து வருகிறது. நீதி கேட்டுப் போராடும் எமது மக்களிற்கு எதிராக மிகவும் கொடூரமான அநீதிகளைப் புரிந்து வருகிறது. பௌத்த தர்மத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் மாபாதகச் செயல்களைப் புரிந்துகொண்டு, தமிழரின் உரிமைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' என வர்ணித்தும் வருகிறது

அன்று தொட்டு இன்று வரை தமிழரின் போராட்டம் அறவழியைத் தழுவி நிற்கிறது. அகிம்சை வழியிலும் சரி, ஆயுத வழியிலும் சரி, தமிழர் வரித்துக் கொண்ட போராட்டம் தர்மத்தின் நியமத்தில் நெறிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தார்மீக அடிப்படையே எமது போராட்டத்தின் ஆன்மீக பலமாகவும் இருந்து வருகிறது

### சமாதானக் கதவுகளை நாம் மூடிவிடவில்லை

நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்துவிடவில்லை; சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாதைகளை மூடிவிடவில்லை சமாதான வழிமூலம் எமது மக்களிற்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்குவரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறோம். எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்ஞை காட்டவும் நாம் தவறவில்லை.

### சர்வதேச சமூகத்தின் தார்மீகக் கடப்பாடு

எமது நோக்கத்தையும், நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகம் இன்று நன்கறியும். சமாதானத்தின் பாதைக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும். உலகத்தின் சமாதான முயற்சிகளுக்கும் ஊறு விளைவிப்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும்.

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும், சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது, உரிமை கேட்டு, நீதி கேட்டு, சமாதான வழியில் தீர்வு கேட்டு நிற்கும் எமது மக்களுக்கு சார்பாகக் குரலெழுப்ப வேண்டும். இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக் கடப்பாடாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடாத்தும் பெண்கள் எழுச்சி நிகழ்ச்சிகளுக்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன் — என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தொடர்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய கிறிஸ்தவர் சமூகம் தரும் புதிய சவால்களுக்கு பதில் அளிக்க இம் மாநாட்டில் ஆராய வேண்டும். ஆயிரம் தேவைகள் அவலக் குரல்களாக எம் காதுகளில் ஒலிக்கலாம். ஆயினும் உடனடித் தேவைகள் எவையென இனம் கண்டு முதன்மைப்படுத்தப்பட்டு பதில் இறுக்கப்படல் வேண்டும்.

கடந்த பத்து ஆண்டுகளாக நீடித்து, இன்னும் தொடரும் உள்நாட்டு யுத்தம் தமிழர் வாழ்வில் பலத்த உடல், உள காயங்களை ஏற்படுத்தி இருக்கின்றன. கசப்பான உணர்வுகளை பிறப்பித்திருக்கின்றன, பாரம்பரிய வாழ்க்கை மதிப்பீடுகளை புரட்டியிருக்கின்றன.

காலத்திற்கு ஏற்ப வாழ்வு மாற்றம் அடையலாம். ஆயினும் மனித நேயங்களின் மதிப்பீடுகள் அதுவும் கிறிஸ்துவின் இறை அரசின் விழுமியங்களை நெகிழப்பட முடியாது அவை மீளப் பெறப்படல் வேண்டும். அன்பு, நீதி, உண்மை, சமாதானம், சகோதரத்துவம் கிறிஸ்துவின் திருச்சபைக்குள்ளும் புறமும் நிலைநிறுத்தப்படல் வேண்டும்.

## எழுச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சி, வலிகாமம் பகுதிகளில் அனைத்துலக மகளிர் தினத்தை எழுச்சி பூர்வமாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக எமது பிரதேசச் செய்தியாளர் தெரிவித்தார்

பருத்தித்துறையில் இன்று மாலை மாளிர் தினத்தை யொட்டிய பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது. விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

(அ-3 162-17-117-173 31)

## மேய்ப்புப் பணி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டகை தலைமையில் இன்று மாலை நடைபெறும் மேய்ப்புப்பணி மாநாட்டுத் திருப்பலியில் —

முன்னாள் யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறைவட்ட ஆயர் அதிவண. கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் குருக்கள், துறவியர், பொது நிலையினர் பெருமளவில் கலந்து சிறப்பிப்பர்.

நாளை மத்தியூஸ் மண்டபத்தில் ஆங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் மேய்ப்புப்பணி மாநாடு 10 ஆம், 11 ஆம், 12 ஆம், 14 ஆம் திகதிகளில் தொடர்ந்து நடைபெறும். (அ-51)

## கடற்படையினரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினர் பருத்தித்துறை கடல் பகுதிக்கு நகர்ந்து கற்கோவளம் பகுதியில் தாக்குதல் நடத்தினர்.

இதனால் பொன்னையா அருந்தவராஜா (வயது 48), பரமானந்தம் பரமநாதன் (வயது 33) ஆகிய இருகற்கோவள வாசிகளும் பலத்த காயமுற்றனர்.

காயமுற்ற நால்வரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் தாக்குதல்களினால் பல மீனவர்கள் தமது கடற்றொழில் உபகரணங்களை கடலில் விட்டுவிட்டு நீந்திக் கரை சேர்ந்தனர் (உ-த-173)

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 29-08-1974

உதிர்வு: 05-03-1994

## செல்வி சுபாங்கி கதிர்காமநாதன்

(உயர்தர வகுப்பு மாணவி)

கற்பனைக் கோட்டை இடிந்ததம்மா
கலையின் சிகரம் சிதைந்ததம்மா
எம்முள்ளம் ஏங்கித் தவிக்குதம்மா
எங்கு காண்போம் உன் முகமம்மா

உயர்தர மாணவர் மன்றம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(சி-7519)

# கண்ணீர் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இரசாயனவியல்துறை (Bio Chemistry) சிரேஷ்ட விரிவுரையாளர்

## கலாநிதி திருமதி S. மகேந்திரன்

எதிர்பாராத விதமாக எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். இவருக்கு மருத்துவ பீட மாணவர்கள் தமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

மருத்துவ மாணவர் ஒன்றியம்
M. S. U.

யாழ் பல்கலைக்கழகம்.
(29801)

# கண்ணீர் அஞ்சலி

## கணங்களாய் காத்திருப்போம்

மலர்வு: 16-09-1955

உதிர்வு: 07-03-1994

அமரர்

கலாநிதி திருமதி சுலோசனா மகேந்திரன்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் மருத்துவபீடம்)

இல்லறத்தில் இருந்து கொண்டே,
இம் மருத்துவச் சோலைக்குள்
ஆழமாகவே அத்திவாரமிட்டு
எங்கள் மூலதனத்திற்காய்
முகவுரை தந்த — நீ
சொந்தங்களுக்கு இங்கே சொல்லாமலே
முடிவுரையை ஏன் வரைந்தாயோ !
இங்கே நாங்களெல்லாம்...
கரைசேர்க்கமுடியா உன் கடனுக்காய்
காத்திருப்போம் தினமும் கல்வெட்டிலே...!

13 ஆம் அணி மாணவர்கள்
யாழ் மருத்துவபீடம்.

(29796)

# மரண அறிவித்தல்கள்

## வ. பொன்னம்பலம் M.A. (V P.)

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆசிரியரும், முள்ளியவளை மகாவித்தியாலய அதிபருமாய் கடமையாற்றி ஓய்வுபெற்றவரும், அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவரும், மல்லாகம் கிராம சபைத் தலைவரும், சமாதான நீதிபதியும், கம்யூனிசவாதியுமான வ. பொன்னம்பலம் (52, B, Sumae Street, Gloucester Ont, KIJ, GP,9, Canada) கனடாவில் காலமானார்.

அனுதாபிகள், உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
இ செல்வராசா
(சகோதரன்)

மருத்திலை,
கந்தரோடை,
சுன்னாகம்.
(29792)

## திருமதி இரத்தினம் துரைசிங்கம்

திருமதி இரத்தினம் துரைசிங்கம் நேற்று (7-3-94) இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் துரைசிங்கத்தின் (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்) அன்பு மனைவியும், பரிமளா (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, மாங்குளம்), பகீரதன் (தொழில்நுட்பக் கல்லூரி, H N D A. T/EV மாணவன்) ஆகியோரது அன்புத் தாயாரும், தன்மலை இளவாலையைச் சேர்ந்த திசைவீரசிங்கம் தம்பதிகளின் தலை மகளும், செல்வரெத்தினம், ருபசிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் வடலியடைப்பு இல்லத்தில் இன்று பகல் 11 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
துரைசிங்கம்
(கணவர்)

அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
[29799]

## திருமதி தெய்வநாயகி கனகநாயகம்

(வட்டுக்கோட்டை)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி கனகநாயகம் நேற்று (7-03 94) காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சி கனகநாயகம் (அத்தியட்சகர், உப்பளம்) அவர்களது அன்பு மனைவியும், S. R. கனகநாயகம் (ராதாகிருஷ்ணன்) (நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடத்திணைக்களம், கொழும்பு), R K கனகநாயகம் (ரஞ்சித்) (பொறியியலாளர், பொட்சுவானா), Dr. கௌரி நித்தியானந்தன் (நியூசிலாந்து), விஜயால் கிருஷ்ணா (கனடா), கோபினி கிருஷ்ணா (இங்கிலாந்து), றமணா கிருஷ்ணா ஆகியோரின் தாயாரும், சரோஜினிதேவி, குகலஷ்மி (பொட்சுவானா) முன்னாள் பேராசிரியர் நித்தியானந்தர் (யாழ் பல்கலைக்கழகம்), குலேந்திரன் (பொறியியலாளர், கனடா), பாலசுப்பிரமணியம் (இங்கிலாந்து), தவராசா (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், கவிதா, மீரா, றம்மியா, கார்த்திகா, பார்த்திபன், கனகா, மயூரன், ஜனகன், கோகுலன், வைரவி, நிரோஷன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று மு ப 11.00 மணியளவில் வட்டுக்கோட்டையில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக வழுக்கியாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
ப. தவராசா
(மருமகன்)

''துவாரகை'',
மணியகாரன் லேன்,
வட்டுக்கோட்டை.
(7118)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் ... அச்சகத்தில் 08 03 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org